1992 செப்டம்பர் 23]

வேறு சில அடையாளங்களை வைத்தோ தாக்குதலுக்கு முன்னாலேயே கண்டுபிடித்து விடமுடியும். எனவே வேளாண்மைத் துறை அலுவலர்களால் எல்லோரும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பகுதி பகுதியாக இல்லாமல் ஒரு முழுமையான பகுதி அனைத்தையும் பாதுகாப்பு நடவடிக்கையாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்பயிர் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த, பூச்சிநோய் நிலை குறித்து வாராந்திர கணிப்பு செய்து, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி வல்லுநரிடம் ஆராய்ச்சி செய்யப்பட்டு, அதன் விவரத்தை விவசாயிகளுக்கு முன்னெச்சரிக்கையாக துண்டுப் பிரசுரங்கள், பத்திரிக்கை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவைகளின் மூலமாக அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பிற்காகவும், பூச்சி நோயிலிருந்து பயிர்களைக் காப்பதற்கும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், இருநாள் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, 50 சதவிகிதம் மானியத்தில் மருந்து தெளிக்கும் கருவிகளும், பூச்சி மருந்து மற்றும் பூச்சி நோயைக் கட்டுப்படுத்த 25 சதவிகிதம் மானியத்தில் மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 57, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

57—

சூளைப்பள்ளம் பகுதியில் குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடிக் கட்டிடம்.

* 9963—திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எம்.ஜி.ஆர். நகரில் உள்ள சூலைப்பள்ளம் பகுதியில் வசிக்கும் குடிசைவாழ் மக்கள் மழைக் காலத்தில் வெள்ளப் பெருக்கினால் சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிசை மாற்று வாரியம், அப்பகுதியை உயர்த்தி, அடுக்குமாடிக் கட்டிடம் கட்டித்தர முன்வருமா?

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இவர்களை மாற்றிடங்களில் குடியமர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போது மாற்று இடம் தருவதாகச் சொன்னார்; நன்றி. மழைக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. செம்பரம்பாக்கத்திலிருந்து வருகிற வெள்ளம் ஒவ்வொரு தடவை மழை வரும்போதும், பெருக்கெடுத்துக் கொண்டு ஓடுகிறது. அந்த ஆற்றை ஒட்டியிருக்கிற சூளைப்பள்ளத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. ஒவ்வொரு தடவையும் வெள்ளம் வரும்போது கிட்டதட்டத் ஒருமாதம் அங்கே குடியிருக்க முடியாது. அவ்வளவு பெரிய பள்ளமாக ஆகியிருக்கிறது. இந்த மழைக் காலத்திற்குள்ளே ஒரு மாற்று இடம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பொழுது எம்.ஜி.ஆர். நகர் சூளைப்பள்ளம் பகுதியில் சுமார் 15 அடி முதல் 20 அடி பள்ளப் பகுதியிலே தாழ்வான பகுதியிலே அடங்கி இருக்கிறது. இந்தப் பகுதியில் 2,000 குடிசைகள் அல்ல; மொத்தம் 3,000 குடிசைகள் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்திலும் வெள்ளத்தால் இந்தப் பகுதி பாதிக்கப் படுகிறது என்ற காரணத்தால்தான் பள்ளமான பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் இந்த இடங்களிலே கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருப்பினும் கூட, கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்தத் தாழ்வான பகுதிகளைச் சுற்றிப் பார்க்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உடனிருந்து வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தாழ்வான பகுதியிலே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று இடங்கள் அளிக்க அன்றே உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே 1992—93-ஆம் ஆண்டில் சுமார் 5,000 அடுக்கு மாடி வீடுகள் எந்த ஒரு ஆட்சிக் காலத்திலும்

1992 செப்டம்பர் 23]

இல்லாத அளவில் அரசு இந்த ஆண்டு செயல்படுத்த இருக்கின்றது. இந்தப் பகுதி Circular Corridor Railway Alignment உள் வட்ட இரயில் பாதை வழியில் அமைக்கப்பட இருக்கின்ற காரணத்தால் இந்தப் பகுதியில் மட்டும் அடுக்கு மாடி வீடுகள் கட்ட இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட வேளச்சேரிப் பகுதியிலே கூடிய விரைவில் சுமார் 1,046 காலி மனைகள் தயார் செய்து குடிசை வாழ் மக்கள் தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது. ஆகவே நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு உடனடியாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 58, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

58—

சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு இறைச்சி உணவு வழங்கல்

*11551—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு வாரத்தில் ஒருமுறை இறைச்சி உணவும் சேர்த்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆகவே, இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். சத்துணவுக் கூடங்களில் படிக்கின்ற குழந்தைகளுக்குப் பெயரளவிலேதான் சத்துணவுக் கூடம் என்று இருக்கின்றதேயொழிய அங்கு உணவுகள் கொடுக்கின்ற விதத்தைப் பார்க்கின்றபொழுது அங்கு படிக்கின்ற குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே போலியோ நோய் வருமோ